**நிதி சந்தை– ஓர் அறிமுகம்**-பொது வறையறு நிறுமங்கள் தங்களின் நிதித் தேவையை பெற்றுக்கொள்ள நிதிசந்தை துணை புரிகிறது. முதலீட்டாளர்கள் தங்கள் உபரி நிதியை நிதிசந்தையில் முதலீடு செய்து வருவாயை பெருக்கிகொள்ளமுடியும்.

**1.இந்திய நிதிமுறையில் ஈடுபடுபவர்கள் யார்?**

1 அமைப்பு நிறுவனங்கள் 2.அமைப்புசாரா நிறுவனங்கள்

**2.அமைப்பு நிறுவனங்கள் எவை?**

1.ஒழுங்காற்று நிறுவனங்கள் .2நிதி நிறுவனங்கள் .3நிதிசந்தை 4.நிதிசார் சேவைகள்.

**3. ஒழுங்காற்று நிறுவனங்கள் என்றால் என்ன** ?

இந்திய நிதி முறையைக் கட்டுப்படுத்துகின்றஅமைப்புகள் ஒழுங்காற்று நிறுவனங்கள் எனப்படும்

ஒழுங்காற்று நிறுவனங்கள்.-சில உதாரணங்கள்

1.RBI-இந்திய ரிசர்வ் வங்கி--.இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

2.IRDAI இந்தியாவிலுள்ள காப்பீட்டுநிறுவனங்களை மேற்பார்வை செய்யும்அமைப்பு.

3.SEBI.இந்திய பங்கு சந்தையின் வளர்ச்சிக்காக பங்கு மாற்றகங்களின் செயல்களை கட்டுப்படுத்தும் ஒருசுதந்திரமான அமைப்பு.

**4.நிதி நிறுவனங்கள் பற்றிக் குறிப்பு வரைக**.

பொதுமக்களிடம் வைப்புகளை பெற்று கடன் வசதி அளிக்கும் நிறுவனங்கள்..வைப்புதாரர்களுக்கு வட்டி வழங்கும். .வங்கிகள் போன்று செயல்படும்

**5.நிதி நிறுவனங்கள்—எடுத்துக்காட்டு தருக**.

1.SHRIRAM CITY UNION FINANCE LTD. 2.SUNDARAM FINANCE LTD. 3.CHOLAMANDALAM FINANCE LTD.

**6.நிதிசார் சேவைகள் என்பது எதைக்குறிக்கும்**?

காப்பீடு,பரஸ்பரநிதிமுதலீடு,,(Mutualfund)வங்கிசேவைகள்(Bankingservices)போன்றவைநிதிசார் சேவைகள் எனப்படும்.

**7.அமைப்பு சாரா நிறுவனங்கள் எவை**?

1.கடன் வழங்குபவர்கள் 2. நாட்டுப்புற வங்கியர்

**8. நாட்டுப்புற வங்கியர் என்பவர் யார்**?

தனி நபர்களுக்கு கடன் வசதி அளிப்பவர்கள். இந்திய ரிசர்வ்வங்கியின் கட்டுப்பாட்டில் இல்லாதவர்கள். வங்கிகளின் வளர்ச்சிக்குப் பின் இவர்கள் சேவை குறைந்துள்ளது.

**9.நிதிசந்தை என்பது எதைக் குறிக்கும்**?

நிதிக்கருவிகள் வியாபாரம் செய்யப்படும் சந்தையை குறிக்கும். பத்திரங்கள்), மற்றும் நிதி சொத்துக்கள்)

**10.நிதிசந்தையின் பொருள் தருக**

உபரிநிதியையக்கொண்டு நிதிப்பற்றாக் குறையைப் போக்க கடன் நிதி உருவாக்கப்படுவது நிதிசந்தை ஆகும்

**11.நிதிசந்தையால் பயன் பெறும் நபர்கள் அல்லது அமைப்புகள் யார்**?

1.தனி நபரகள் .2விவசாயத் துறை 3.தொழிற்துறை 4.சேவைத்துறை.

5.நிதி நிறுவனங்கள் (வங்கிகள், காப்பிடுத்துறை ) 6.அரசு

**12. நிதிசந்தையின் வாயிலாக நிறுவனங்கள் பெறும் நன்மைகள் யாவை**?

குறுகிய கால நிதி மற்றும் நீண்டகால நிதியை பெறுகின்றன.
நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படுகிறது.

**13.நிதி சந்தைகளின் வகைகள்யாவை**?

**1.நிதி கோருதல் அடிப்படையில்** 1.கடன் சந்தை 2.சமநிலை பங்குச் சந்தை
**2.நிதி கோருதலின் முதிர்வு அடிப்படையில்** 1.பண சந்தை 2.மூலதன சந்தை
**3.நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில்** 1.முதல் நிலை சந்தை 2.இரண்டாம் நிலைச் சந்தை
**4.நிதி கோருதலின் வழங்கலின் கால அடிப்படையில்** 1.ரொக்கம் அல்லது உடனடிச்சந்தை 2.முன்னோக்கிய அல்லது எதிர்கால சந்தை
**5.நிதிசந்தை அமைப்பின் அடிப்படையில்** 1.பரிமாற்றக வர்த்தகச் சந்தை 2.உடனடிச் சந்தை

**14.கடன் சந்தை என்றால் என்ன**?

கடன் கருவிகள் வர்த்தகம் செய்யப்படும் சந்தை கடன் சந்தை எனப்படும்.
கடன் கருவிகளுக்கு—உதாரணம் .1அரசு பத்திரங்கள் அல்லது பிணையங்கள்
2.நிறும கடனிட்டுப்பதிரங்கள்

**15.சமநிலை பங்கு சந்தை என்றால் என்ன**?

நிறுமச் சமநிலை பங்குகள் வர்த்தகம் செய்யப்படும் சந்தை.

**16.பணச் சந்தை விளக்கம் தருக**.

குறுகிய கால நிதி கோருதலுக்கான சந்தை பணச் சந்தை எனப்படும்.(ஒரு ஆண்டு)

**17.பண சந்தையில் கையாளப்படும் நிதிகருவிகள் எவை**?

**கருவூலச் சீட்டுக்கள்** ..பொதுமக்களிடமிருந்து அரசு நிதி திரட்ட வெளியிடும் சீட்டுக்கள்.(இவை T-BILLS என அழைக்கப்படும். 2.இவை தள்ளுபடியில் வெளியிடப்படும் முதிர்வின் போது முக மதிப்பில் பணம் கொடுத்து அரசு மீட்டுக்கொள்ளும். Rs.100 முக மதிப்புள்ள சீட்டுக்கள் Rs.95க்கு வெளியடப்படும் .

**2வணிகத்தாள்கள்**. பெரிய. நிறுவனங்கள் தங்களின் குறுகிய கால நிதித் தேவைக்காக வெளியிடும் ஒரு கடன் ஆவணம். முதிர்வு அதிக பட்சம்:270 நாட்கள்

**3.வைப்புசான்றிதழ்கள்**.ஒருகுறிப்பிட்டதொகையைகுறிப்பிட்டகாலத்திற்குவைப்புசெய்வது நிலை வைப்பு ஆகும். வங்கிகள் இதனை ஏற்கும்வங்கிகள் வைப்புகளை .
.ஏற்றுக்கொண்டதற்க்கு சான்றாக வழங்கும் இரசீது.

**18.மூலதன சந்தை என்றால் என்ன**?

நீண்ட கால நிதி கோருதலுக்கான சந்தை.(ஒரு ஆண்டுக்கு மேல்) . பங்குகள் கடனிட்டுப்பதிரங்கள் கையாளப்படும்.

**19.முதல் நிலைச் சந்தை என்றால் என்ன**?

நிறுமங்கள் முதன் முதலில் பத்திரங்களை வெளியிட்டு முதலினைத் திரட்டுவது .பணம் முதலீட்டாளர்களிடமிருந்துநேரிடையாக நிறுமத்திற்கு செல்லும் .பொது நிறுமங்கள் வழக்கமாக பின்பற்றும் நடைமுறை. பங்குதாரர் நிறுமத்தில் நேரிடையாக முதலாவதாக இணைகிறார்.

20..**இரண்டாம் நிலை சந்தை விளக்கம் தருக**.

ஏற்கனவே வெளியடப்பட்ட பங்குகளுக்கானசந்தை.இதில் பங்குமாற்றகம் ஒரு முக்கிய நிறுவனம்.

**21.ரொக்கம் அல்லது உடனடி சந்தை—விவரி**
1.தீர்வு உடனடியாக நடைபெறும் சந்தை.2 பத்திரங்கள் மற்றும் ரொக்கம் உடனடியாக பரிமாற்றம் ஆகும்.
**22.எதிர்கால சந்தை என்பது எதைக்குறிக்கும்**?
1.விலை உடனடியாக முடிவு செய்யப்படும்.
2.ரொக்கம் செலுத்துவது மற்றும் பத்திரம் வழங்குவது எதிர்காலத்தில் நடைபெறும்.
**23.பரிமாற்றக வர்த்தகசந்தையின் பொருள் தருக**.
பங்கு மாற்றகத்தில்நடைபெறும் பத்திர சந்தை.ஒரே ஒழுங்கு நடைமுறைகளைக் கொண்டது.
**24.உடனடி சந்தை என்பது எதைக்குறிக்கும்**?
பங்கு மாற்றகத்திற்கு வெளியில் நடைபெறும்.வழக்கமான நடைமுறைகள் கொண்ட பரவலாக்கப்பட்ட சந்தை.
**25.பங்கு மாற்றகம் என்பது எது**?
பத்திரச்சந்தையில் ஒழுங்கு நடைமுறைகளைக் கொண்ட மைய அமைப்பு. இந்தியாவில் செயல்படும் பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை 21. இந்தியாவில் செயல்படும் பங்குச் சந்தைகளில் முக்கியமானவை. 1.தேசிய பங்கு சந்தை(NSE) 2.மும்பை பங்கு சந்தை)BSE)
**26.நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நிதிசந்தையின் பங்கு பற்றி விவரி**
. **1.சேமிப்பைப் பெருக்குதல்**தனி நபர்கள்-,நிறுவனங்கள்,மற்றும் அரசிடமிருந்து உபரி நிதியைப் பெற துணை புரிகிறது.
2.**முதலீடுகளை உருவாக்குவது**—நிதி முதலீடுகளை வசூலித்து தேவைப்படுவோற்கு வழங்குகிறது.
3.**தேசிய வளர்ச்சி மேம்பாடு**---உபரி நிதியை ஆக்கப்பூர்வ வழியில் பயன்படுத்த வகை செய்வதால் தேசிய வளர்ச்சி சாத்தியமாகிறது.
**4.தொழில் முனைவோர் வளர்ச்சி**---புதிய தொழில் முனைவோர்களுக்கு நிதி கிடைக்கவகை செய்வதால் அவர்களின் தொழில்வளர்ச்சி மேம்படுகிறது.
**5..தொழில்துறை மேம்பாடு**---ஒருநாட்டின் துரித வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு நிதிசந்தையின் பணிகள் துணை புரிகிறது..மக்களின் வாழ்கைத்தரம் உயருகிறது.
**27.நிதிசந்தையின் பணிகள் யாவை?**
1.இடை நிலையர் சார்ந்த பணிகள். 2.நிதி சார்ந்த பணிகள்.
**28.இடைநிலையர் சார்ந்த பணிகளைக் குறிப்பிடுக**.
1.வளஆதாரங்களின் பரிமாற்றம். 2.வருவாயை அதிகரித்தல். 3.ஆக்கபூர்வ பயன்பாடு. 4.மூலதன உருவாக்கம் . 5.விலை நிர்ணயம் 6.விற்பனை வழிமுறைகள். 7.தகவல்கள்
**29.இடைநிலையர் சார்ந்த பணிகள்விளக்கம்**---
*1.வள ஆதாரங்களின் பரிமாற்றம்*..--கடன் பெற இருப்பவர்கள் நிதியை பெற முடியும்.
*2.வருவாய்அதிகரித்தல்*-- கடன் வழங்குபவர்கள் வட்டி, பங்காதாயம் ஈட்ட முடியும்.
3.*ஆக்கபூர்வ பயன்பாடு*.---வருமானம் மற்றும் தேசிய உற்பத்தி அதிகரிக்கும்.
*4.மூலதன உருவாக்கம்*.-– நிதிசந்தைகள், சேமிப்பு மூலம் நாட்டின் மூலதன உருவாக்கம் உயர வகை செய்கிறது.

*5.விலை நிர்ணயம்.*---வாங்குபவர்கள் விற்பனை கலந்துரையாடல் மூலம் நிதி சொத்துக்களின் விலை நிர்ணயம் செய்ய இது உதவுகிறது.
*6.விற்பனை வழி முறைகள்.*--முதலீட்டாளர்கள் எளிதில் நிதி சொத்துக்களை விற்க முடியும்.
*7.தகவல்கள்.*....நிதிசந்தைதொடர்பானஅனைத்துதகவல்களையும்(விலை,தேவை,அளிப்பு, நிறும இலாபம்) அதில் ஈடுபடுவோர் பெற முடியும்.

**30.நிதிசந்தையின் நிதிசார்ந்த பணிகள்**

**1.**கடன்வாங்குபவர்களுக்கு நிதியை வழங்குகிறது. கடன் வாங்குபவர்கள் முதலீட்டு திட்டங்களை செல்படுத்தமுடியும் .**2.**கடன் வழங்குபவர்கள் சொத்துக்களையும் அதன் மூலம் செல்வதையும் ஈட்ட முடியும் . 3.நீர்மைத்தன்மை இருப்பதால் நிதியை எளிதில் வணிகம் செய்ய முடியும்.

**31.முதல் நிலைச் சந்தை இரண்டாம் நிலைச்சந்தை வேறுபடுத்துக**.

| **எண்** | **ஒப்பீடு** | **முதல் நிலை சந்தை** | **இரண்டாம் நிலை சந்தை** |
|---|---|---|---|
| 01 | பொருள் | புதிய பங்கு விற்பனை | பழைய பங்கு விற்பனை |
| 02 | நடைபெறும்முறை | நேரிடையாக | மறைமுகமாக |
| 03 | நிதி | நிறும விரிவாக்கத்திற்கு | முதலீட்டாளர்களுக்கு |
| 04 | எத்தனை முறை | ஒரே முறை | பல முறை |
| 05 | நபர்கள் | நிறுமம் மற்றும் முதலீட்டாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் |
| 06 | ஆதாயம் பெறும் நபர் | நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| 07 | விலை | நிலையானது | தேவை மற்றும் அளிப்பை பொறுத்து மாறும் |
| 08 | இடைநிலையர்கள் | ஒப்புறுதியாளர்கள் | தரகர்கள் |
| 09 | அமைப்பு வேறுபாடு | குறிப்பிட்ட புவியியல் இடம் இல்லை | இதற்கு புற அமைப்பு உள்ளது. |

**32.புற அமைப்பு சொத்துக்கள் என்பது எதைக்குறிக்கும்?**

1.நுகர்வுக்கு பயன்படும் சொத்துக்கள் புற அமைப்புசொத்துக்கள் எனப்படும்...2 நிலம் ,கட்டிடம்,தங்கம், வெள்ளி. போன்ற சொத்துக்கள்.

**33.புற அமைப்பு சொத்து நிதி சொத்தாக மாற வாய்ப்பு ஏற்படுமா?எவ்வாறு?**

வாய்ப்பு ஏற்படும்..குடிஇருப்புக்காக கட்டிடம் வாங்கப்பட்டால் அது புற அமைப்பு சொத்து. அக் கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டால் அது நிதி சொத்தாக மாறும்.

**34.சந்தைப்படுத்தப்படும் சொத்துக்கள் என்பவை எது?**

ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு எளிதாக மாற்றப்படும் சொத்துக்கள் சந்தைப்படுத்தப்படும் சொத்துக்கள் எனப்படும். எடுத்துக்காட்டுகள். பங்குகள், அரசுப்பத்திரங்கள் .

**35.சந்தைப்படுத்தப்படாத சொத்துக்கள் என்பவை எவை?** எளிதில் மாற்றமுடியாத சொத்துக்கள் , சந்தைப்படுத்தப்படாத சொத்துக்கள் எனப்படும். வங்கி வைப்புகள், சேமநல வைப்புகள், ஓய்வுதிய நிதிகள், காப்பீடுகள் ,தேசிய சேமிப்புப் பத்திரங்கள் போன்றவை.